# GROUP II & IIA PRELIMS & MAINS |MODEL TEST

# MODEL QUESTION | THIRUKURAL




**ADMISSION OPEN FOR GROUP II|IIA | PRELIMS | MAINS**

**ONLINE CLASSES & TEST SERIES**

**FOR ADMISSION: 9952521550**

**Combined Civil Services Examination-II - Interview Posts**

| S. No | Name of the post |
|---|---|
| 1 | **Deputy Commercial Tax Officer ( now Changed as Deputy Sales Tax Officer)**<br>துணை வணிக வரி அதிகாரி |
| 2 | **Municipal Commissioner, Grade-II**<br>நகராட்சி ஆணையாளர், நிலை ,2 |
| 3 | **Junior Employment Officer (Non-Differently Abled)**<br>இள நிலை வேலைவாய்ப்பு அலுவலர் ( மாற்றுத்திறனாளிகள் அல்லாதது) |
| 4 | **Junior Employment Officer (Differently Abled)**<br>இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் ( மாற்றுத்திறனாளி) |
| 5 | **Sub-Registrar, Grade-II**<br>சார்பதிவாளர் நிலை ,2 |
| 6 | **Assistant Inspector of Labour**<br>தொழிலாளர் துறை துணை ஆய்வாளர் |
| 7 | **Assistant Section Officer (Secratariat) (Other than Law and Finance Department)**<br>துணை பிரிவு அலுவலர் ( தலைமைச் செயலகம்) ( நிதி மற்றும் சட்டத்துறை தவிர்த்து) |
| 8 | **Assistant Section Officer (Law Department)**<br>துணை பிரிவு அலுவலர் ( சட்டத்துறை) |
| 9 | **Assistant Section Officer (Finance Department)**<br>துணை பிரிவு அலுவலர் ( நிதித்துறை) |
| 10 | **Assistant Section Officer in the Tamil Nadu Public Service Commission**<br>துணை பிரிவு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் |
| 11 | **Assistant Section Officer-cum-Programmer,TNPSC**<br>துணை பிரிவு அலுவலர் மற்றும் நிரலாளர் ( டி என் பி எஸ் சி) |
| 12 | **Assistant Section Officer, Tamil Nadu Legislative Assembly Secretariat Service**<br>துணை பிரிவு அலுவலர், தமிழ்நாடு சட்டப்பேரவைகள் செயலகச் சேவை |
| 13 | **Probation Officer, Social Defence**<br>நன்னடத்தை அலுவலர், சமூக பாதுகாப்பு |
| 14 | **Probation Officer, Prison Department**<br>நன்னடத்தை அலுவலர் , சிறைத்துறை |
| 15 | **Industrial Co-operative Officer, Industries Commissioner and Director of Industries and Commerce**<br>தொழிற்சாலை கூட்டுறவு அலுவலர், தொழிற்சாலைகள் ஆணையர் மற்றும் தொழில் மற்றும் வர்த்தகத்துறை இயக்குனர் |
| 16 | **Women Welfare Officer, Social Defence**<br>பெண்கள் நல அலுவலர் , சமூக பாதுகாப்பு |
| 17 | **Deputy Inspector of Survey Director of Survey and Settlements**<br>துணை ஆய்வாளர் , சர்வே மற்றும் நிலச்சீர்திருத்த இயக்குனர் |
| 18 | **Senior Inspector of Co-operative Societies in Reg.Co-op Scty**<br>முது நிலை கூட்டுறவு ஆய்வாளர் ( கூட்டுறவு சங்கங்கள்) |
| 19 | **Receptionist, Thamizhagam Guest House, Udhagamandalam**<br>வரவேற்பாளர், தமிழக விருந்தினர் இல்லம், உதகமண்டலம் |
| 20 | **Supervisor of Industrial Co-operatives Industrial Commissioner and Director of Industries and Commerce Department** |

| | |
|---|---|
| | தொழிற்சாலை கூட்டுறவு மேற்பார்வையாளர்(தொழிற்சாலைகள் ஆனையர் மற்றும் தொழில் மற்றும் வர்த்தகத்துறை இயக்குனர்) |
| 21 | Project Assistant Adi-Dravidar and Tribal Welfare Department<br>திட்ட உதவியாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை |
| 22 | Audit Inspector in the Audit wing Hindu Religious and Charitable Endowments Administration Department<br>தனிக்கை ஆய்வாளர் , தமிழ்னாடு இந்து சமய அறனிலையத்துறை |
| 23 | Assistant Inspector of Local Fund Audit Department and Internal Audit Department<br>உள்ளாட்சி தனிக்கை அலுவலர் |
| 24 | Supervisor / Senior Clerk / Head Accountant / Junior Superintendent in the Tamil Nadu Agricultural Marketing Subordinate Service<br>மேற்பார்வையளர்|/முது நிலை கணக்கர்/ தலைமைக் கணக்கர்/ இளனிலை மேற்பார்வையாளர், தமிழ்னாடு வேளாண் சந்தைப் படுத்துதல் துனை நிலைப் பணிகள் |
| 25 | Assistant Jailor, Prison Department<br>துணை சிறை அலுவலர், சிறைத்துறை |
| 26 | Assistant in Revenue Department<br>உதவியாளர், வருவாய் துறை |
| 27 | Executive Officer, Grade-II in Town Panchayats Department<br>செயல் அதிகாரி, நிலை2, நகர்ப்புற பஞ்சாயத்து துறை |
| 28 | Special Assistant in DVAC<br>சிறப்பு உதவியாளர் ( தமிழ்னாடு ஊழல் தடுப்பு ஆணையம்) |
| 29 | Handloom Inspector<br>கைத்தறி ஆய்வாளர் |
| 30 | Special Branch Assistant in Intelligence Wing of Police Dept.<br>சிறப்பு உதவியாளர் , தமிழக நுண்ணறிவுப் பிரிவு காவல் |
| 31 | Senior Inspector of Co-operative Societies in Milk Production and Dairy Development<br>முதுனிலை ஆய்வாளர் கூட்டுறவுத்துறை ( பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டு துறை) |
| 32 | Audit Assistant in Accounts Branch in Highways Dept.<br>தனிக்கை உதவியாளர் , நெடுஞ்சாலைத்துறை கணக்கு பிரிவு |

Average Expected Salary (35+)

## Combined Civil Services Examination-II (Group-II A Services)
## (Non-Interview post)

| S No | Name of the post |
|---|---|
| 1 | Accountant in the Treasuries and Accounts Department<br>கணக்காளர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை |
| 2 | Junior Co-operative Auditor<br>இள நிலை கூட்டுறவு தணிக்கையாளர் |
| 3 | Assistant in Secretariat (Other than Law and Finance)<br>உதவியாளர் , தலைமைச் செயலகம் ( நிதி மற்றும் சட்டத்துறை தவிர்த்து) |
| 4 | Junior Technical Assistant, Civil Supplies Department<br>இளனிலை தொழில்னுட்ப உதவியாளர் , ( உணவு வழங்கல் துறை) |
| 5 | Personal Clerk (Other than Law and Finance Department)<br>தனி எழுத்தர் ( நிதி மற்றும் சட்டத்துறை தவிர்த்து) |
| 6 | Personal Clerk (Law Department) |

| | |
|---|---|
| | தனி எழுத்தர் ( சட்டத்துறை) |
| 7 | **Personal Clerk (Finance Department)**<br>தனி எழுத்தர் ( நிதித்துறை ) |
| 8 | **Personal Clerk in the Tamil Nadu Public Service Commission**<br>தனி எழுத்தர் , தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் |
| 9 | **Personal Clerk, Tamil Nadu State Planning Commission**<br>தனி எழுத்தர் , தமிழ்நாடு திட்டக்குழு |
| 10 | **Steno-Typist in Tamil Nadu Legislative Assembly Secretariat Service**<br>தட்டச்சர்-சுருக்கெழுத்தாளர் , தமிழக சட்டப்பேரவை செயலகச் சேவை |
| 11 | **Assistant in various departments**<br>பல்வேறு துறைகளில் உள்ள உதவியாளர்கள்<br>**Commissioner of Revenue Administration, Industries and Commerce, Medical and Rural Health Services, Registration, Transport, Prison, Police, Civil Supplies and Consumer Protection, Land Administration, Land Reforms, Fisheries, PWD, Technical Education, Backward Classes, Labour, Employment and Training, Commercial Taxes, Highways and Rural Development and Panchayat Raj, Public Health and Preventive Medicine, Archives and Historical Research, Forest, H.R & C.E., Social Defence, NCC., Animal Husbandry & Veterinary Services, Vigilance & Anti Corruption Dept., Information and Public Relation, School Education.** |
| 12 | **Assistant in Secretariat Department (Finance Department)**<br>உதவியாளர் ( தலைமைச் செயலகம்) நிதித்துறை |
| 13 | **Assistant in Tamil Nadu Public Service Commission**<br>உதவியாளர், டி என் பி எஸ் சி |
| 14 | **Lower Division Clerk in Tamil Nadu Legislative Assembly, Secretariat**<br>கீழ் நிலை எழுத்தாளர் ( தமிழகச் சட்டப்பேரவை , தலைமைச் செயலகம்) |
| 15 | **Planning Junior Assistant**<br>திட்டமிடுதல் இள நிலை உதவியாளர் |
| 16 | **Receptionist (Small Savings Department)**<br>வரவேற்பாளர் ( சிறுசேமிப்பு துறை) |
| 17 | **Assistant in Law Department**<br>உதவியாளர் ( சட்டத்துறை) |
| 20 | **Assistant in Tamil Nadu Legislative Assembly Secretariat Service**<br>உதவியாளர் ( தமிழ்நாடு சட்டப்பேரவை செயலக சேவை ) |

**(Average Expected Salary -23+)**

**Educational Qualification: Any Degree**

**Scheme of Examination**

**Stage - I Preliminary Objective type**

| | |
|---|---|
| General studies | 175 questions |
| Aptitudes | 25 questions |

**Stage –II Main Written examination (300 Marks) (Descriptive Type) pattern**

# IYACHAMY ACADEMY

Institution For Competitive Exam

Ready For Group 2,2A Mains 2021 ?

## GROUP 2 MAINS TEST SERIES -2021

ONLINE & OFFLINE TEST

FEE OFFLINE - RS.18000 / POSTAL - RS 15000

Starts From July Second Week



**DURATION: TILL MAINS EXAM**
காலம்: முதன்மைத் தேர்வு வரை

**TOTAL TEST: 15 UNIT WISE + 10 FULL TEST**
மொத்த தேர்வுகள் : 15 அலகு தேர்வுகள் + 10 முழுத்தேர்வுகள்

**SPECIAL EMPHASIS ON THIRUKURAL ESSAY**
திருக்குறள் கட்டுரைக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படும்

**EXPLANATION VIDEO FOR THIRUKURAL AND TRANSLATION PART**
திருக்குறள் மற்றும் மொழிப்பெயர்ப்பு பகுதிக்கு விளக்க வீடியோ

**HARD COPY MATERIALS FOR UNIT WISE IN TAMIL & ENGLISH MEDIUM**
அலகு அடிப்படையில் அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்

**INDIVIDUAL FEEDBACK**
தனியான மதிப்பீடு

**ANSWER BOOKLET WILL BE PROVIDED**
விடைப் புத்தகங்கள் வழங்கப்படும்

**FOR POSTAL STUDENTS MATERIALS & ANSWER BOOKLETS WILL BE SENT VIA COURIER**
அஞ்சல் வழித் தேர்வர்களுக்கு பாடக்குறிப்புகள் &விடைத்தாள்கள் கூரியர் மூலம் அனுப்படும்

**FOR DETAILS CONTACT**
9952521550

**ADDRESS**
NO.172,THIRUGNANASAMBANDAR ST,
ANNACHI KADAI,TIRUVALLEESWARAR NAGAR,
ANNA NAGAR WEST, CHENNAI - 600040

| **PAPER - I (S.S.L.C. Standard) (Duration: 1 Hours 30 Minutes)** | | | | | |
|---|---|---|---|---|---|
| **Sl. No.** | **Title** | **Number of questions to be asked** | **Marks** | **Total Marks** | **Remarks** |
| 1. | Tamil to English Translation | 2 | 25 | 50 | Total Marks -100 Minimum Qualifying Marks – 25 (Answer sheets of the candidates who do not secure minimum qualifying marks in Paper-I will not be considered for the evaluation of Paper-II) |
| 2. | English to Tamil Translation | 2 | 25 | 50 | |
| **PAPER - II (Degree Standard) (Duration: 3 Hours)** | | | | | |
| 1. | Precis Writing | 3 | 20 | 60 | Total Marks – 300 (This part has to be answered fully in Tamil or in English alone) (Marks secured in Paper-I will not be considered for selection. **Marks secured in Paper-II alone will be considered for selection.**) |
| 2. | Comprehension | 3 | 20 | 60 | |
| 3. | Hints Development | 3 | 20 | 60 | |
| 4. | Essay Writing on 'Thirukkural' | 3 | 20 | 60 | |
| 5. | Letter writing (Official) | 3 | 20 | 60 | |

**STAGE – 3**

**INTERVIEW**

- **ORAL TEST WILL BE CONDUCTED FOR INTERVIEW POST ALONE**
- **ORAL TEST WILL BE 40 MARKS**
- **BASED ON MAINS WRITTEN MARK + INTERVIEW MARKS DECIDE YOUR POSTING AND RANKING**

**TNPSC GROUP – 2 NEW SYLLABUS – PRELIMINRY**

**QUESTION PATTER (175GS+25MENTAL ABILITY)**

**Expected Question Distribution**

| Subject | Number of Questions asked in Group 2 Model Question paper released by TNPSC | **Number of Questions** |
|---|---|---|
| Development Administration | **38** | **30-35** |
| Tamil Culture & History | **47** | **40-50** |
| General Science | **14** | **15 -20** |
| Current Events | **13** | **15-20** |
| Geography | **12** | **10-15** |
| History & Culture of India | **11** | **10-15** |

| | | |
|---|---|---|
| Indian Polity | **16** | **15-20** |
| Indian Economy | **17** | **15-20** |
| Indian National Movement | **11** | **10-15** |
| Mental Ability | **25** | **25** |

**எதிர்பார்க்கப்படும் பாடவாரியாண வினாக்கள் எண்ணிக்கை**

| பாடம் | குருப் 2 மாதிரி வினாத்தாளில் கேட்கப்பட்ட கேள்விகள் | எதிர்பார்க்கப்படுவை |
|---|---|---|
| தமிழக மேம்பாட்டு நிர்வாகம் | 38 | 30-35 |
| தமிழக வரலாறு பண்பாடு தொடர்பானவை | 47 | 40-50 |
| பொது அறிவியல் | 14 | 15 -20 |
| நடப்பு நிகழ்வுகள் | 13 | 15-20 |
| புவியியல் | 12 | 10-15 |
| வரலாறு மற்றும் பண்பாடு | 11 | 10-15 |
| இந்திய அரசியலமைப்பு | 16 | 15-20 |
| இந்தியப் பொருளாதாரம் | 17 | 15-20 |
| இந்திய தேசிய இயக்கம் | 11 | 10-15 |
| புத்திக்கூர்மை,கணிதம் | 25 | 25 |

**UNIT-I: GENERAL SCIENCE**

- Scientific Knowledge and Scientific temper - Power of Reasoning - Rote Learning Vs Conceptual Learning - Science as a tool to understand the past, present and future.
- Nature of Universe - General Scientific Laws – Mechanics - Properties of Matter, Force, Motion and Energy - Everyday application of the basic principles of Mechanics, Electricity and Magnetism, Light, Sound, Heat, Nuclear Physics, Laser, Electronics and Communications.
- Elements and Compounds, Acids, Bases, Salts, Petroleum Products, Fertilizers, Pesticides.
- Main concepts of Life Science, Classification of Living Organisms, Evolution, Genetics, Physiology, Nutrition, Health and Hygiene, Human diseases.
- Environment and Ecology

**அலகு - I- பொது அறிவியல்**

- அறிவியல் அறிவு மற்றும் அறிவியல் உணர்வு - பகுத்தறிதல் - பொருள் **உணராமல் கற்றலும் கருத்துணர்ந்து கற்றலும் - கடந்தகாலம், நிகழ்காலம்,** எதிர்காலம் பற்றி புரிந்து கொள்வதற்கான ஒரு கருவி அறிவியல்.
- பேரண்டத்தின் இயல்பு - பொது அறிவியல் விதிகள் - இயக்கவியல் - பருப்பொருளின் பண்புகள், விசை, இயக்கம் மற்றும் ஆற்றல் - அன்றாட வாழ்வில் இயக்கவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம், அணுக்கரு இயற்பியல், லேசர் (LASER), மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் ஆகியவற்றின் அடிப்படை கோட்பாடுகளின் பயன்பாடுகள்.**தனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள்,** பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிகொல்லிகள்.
- உயிரியலின் முக்கியகோட்பாடுகள், உயிர் உலகின் வகைப்பாடு, பரிணாமம், மரபியல், உடலியங்கியல், உணவியல், உடல் நலம் மற்றும் சுகாதாரம், மனிதநோய்கள்.
- சுற்றுப்புறச்சூழல் மற்றும் சூழலியல்,

**UNIT-II: CURRENT EVENTS**

- History - Latest diary of events - National symbols - Profile of States - Eminent personalities and places in news – Sports - Books and authors.

- Polity - Political parties and political system in India - Public awareness and General administration - Welfare oriented Government schemes and their utility, Problems in Public Delivery Systems.
- Geography - Geographical landmarks.
- Economics - Current socio - economic issues.
- Science - Latest inventions in Science and Technology

**அலகு - II: நடப்பு நிகழ்வுகள்**

- வரலாறு -அண்மை நிகழ்வுகளின் தொகுப்பு - தேசியச் சின்னங்கள் - மாநிலங்கள் குறித்த விவரங்கள் - செய்திகளில் இடம்பெற்ற சிறந்த ஆளுமைகளும் இடங்களும் - விளையாட்டு - நூல்களும் ஆசிரியர்களும்
- ஆட்சியியல் - இந்தியாவில் அரசியல் கட்சிகளும் ஆட்சியியல் முறைமைகளும் - பொது விழிப்புணர்வும் (Public Awareness) பொது நிர்வாகமும் - நலன்சார் அரசுத் திட்டங்களும் அவற்றின் பயன்பாடும், பொது விநியோக அமைப்புகளில் நிலவும் சிக்கல்கள்.
- புவியியல் - புவியியல் அடையாளங்கள்.
- பொருளாதாரம் - தற்போதைய சமூக பொருளாதார பிரச்சினைகள்.
- அறிவியல் - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள்.

**UNIT- III: GEOGRAPHY OF INDIA**

- Location – Physical features - Monsoon, rainfall, weather and climate - Water resources - Rivers in India - Soil, minerals and natural resources - Forest and wildlife - Agricultural pattern.
- Transport - Communication.
- Social geography – Population density and distribution - Racial, linguistic groups and major tribes.
- Natural calamity – Disaster Management – Environmental pollution: Reasons and preventive measures – Climate change – Green energy

**அலகு - III: இந்தியாவின் புவியியல்**

- அமைவிடம் - இயற்கை அமைவுகள் - பருவமழை, மழைப்பொழிவு, வானிலை மற்றும் காலநிலை - நீர் வளங்கள் - இந்திய ஆறுகள் - மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் - காடு மற்றும் வனஉயிரினங்கள் - **வேளாண் முறைகள்.**
- போக்குவரத்து - தகவல் தொடர்பு.
- சமூகப் புவியியல் - மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரவல் - இனம், மொழிக் குழுக்கள் மற்றும் முக்கியப் பழங்குடிகள்.
- இயற்கைப் பேரிடர் - பேரிடர் மேலாண்மை - சுற்றுச்சூழல் மாசுபடுதல்: காரணங்களும் தடுப்பு முறைகளும் - பருவநிலை மாற்றம் - பசுமை ஆற்றல்.

**UNIT – IV: HISTORY AND CULTURE OF INDIA**

- Indus valley civilization - Guptas, Delhi Sultans, Mughals and Marathas - Age of Vijayanagaram and Bahmani Kingdoms - South Indian history.
- Change and Continuity in the Socio - Cultural History of India.
- Characteristics of Indian culture, Unity in diversity – Race, language, custom.
- India as a Secular State, Social Harmony

**அலகு - IV: இந்தியாவின் வரலாறும் பண்பாடும்**

- சிந்துவெளி நாகரிகம் - குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் - விஜயநகர மற்றும் பாமினி அரசுகளின் காலம் - தென் இந்திய வரலாறு.
- இந்திய சமூகப் பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும்.

- இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை - இனம், மொழி, வழக்காறு.
- இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம்.

**UNIT-V: INDIAN POLITY**

- Constitution of India - Preamble to the Constitution - Salient features of the Constitution - Union, State and Union Territory.
- Citizenship, Fundamental rights, Fundamental duties, Directive Principles of State Policy.
- Union Executive, Union legislature – State Executive, State Legislature – Local governments, Panchayat Raj.
- Spirit of Federalism: Centre - State Relationships.
- Election - Judiciary in India – Rule of law.
- Corruption in public life – Anti-corruption measures – Lokpal and LokAyukta - Right to Information - Empowerment of women - Consumer protection forums, Human rights charter.

**அலகு - V: இந்திய ஆட்சியியல்**

- **இந்திய அரசியலமைப்பு - அரசியலமைப்பின் முகவுரை - அரசியலமைப்பின்** முக்கிய கூறுகள் - ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரேதசங்கள்.
- குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்.
- ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் - மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் - உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ்.
- கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள்: மத்திய - மாநில உறவுகள்.
- தேர்தல் - இந்திய நீதி அமைப்புகள் - சட்டத்தின் ஆட்சி.
- பொதுவாழ்வில் ஊழல் - ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் - லோக்பால் **மற்றும் லோக் ஆயுக்தா - தகவல் உரிமை - பெண்களுக்கு** அதிகாரமளித்தல் - நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் - மனித உரிமைகள் **சாசனம்.**

**UNIT-VI: INDIAN ECONOMY**

- Nature of Indian economy – Five year plan models - an assessment – Planning Commission and Niti Ayog
- Sources of revenue – Reserve Bank of India – Fiscal Policy and Monetary Policy - Finance Commission – Resource sharing between Union and State Governments - Goods and Services Tax.
- Structure of Indian Economy and Employment Generation, Land reforms and Agriculture - Application of Science and Technology in agriculture - Industrial growth - Rural welfare oriented programmes – Social problems – Population, education, health, employment, poverty.

**அலகு - VI: இந்தியப் பொருளாதாரம்**

- இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் - ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் - ஒரு மதிப்பீடு - திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்,
- வருவாய் ஆதாரங்கள் - இந்திய ரிசர்வ் வங்கி - நிதி கொள்கை மற்றும் பணவியல் கொள்கை - நிதி ஆணையம் - மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு - சரக்கு மற்றும் சேவை வரி.
- இந்திய பொருளாதார அமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை - வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு - தொழில் வளர்ச்சி - ஊரக நலன்சார் திட்டங்கள் - சமூகப் பிரச்சினைகள் - மக்கள் தொகை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, வறுமை.

**UNIT-VII: INDIAN NATIONAL MOVEMENT**

- National renaissance – Early uprising against British rule - Indian National Congress - Emergence of leaders – B.R.Ambedkar, Bhagat Singh, Bharathiar, V.O.Chidambaranar,

Jawaharlal Nehru, Kamarajar, Mahatma Gandhi, Maulana Abul Kalam Azad, Thanthai Periyar, Rajaji, Subash Chandra Bose and others.

- Different modes of Agitation: Growth of Satyagraha and Militant movements.
- Communalism and partition.

**அலகு - VII: இந்திய தேசிய இயக்கம்**

- தேசிய மறுமலர்ச்சி - ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் - இந்திய தேசிய காங்கிரஸ் - தலைவர்கள் உருவாதல் - பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், ஜவகர்லால் நேரு, காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆசாத், தந்தை பெரியார், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பலர்.
- விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள்: அகிம்சை முறையின் வளர்ச்சி மற்றும் புரட்சிகர இயக்கங்கள்.
- வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை.

**UNIT- VIII : History, Culture, Heritage and Socio - Political Movements in Tamil Nadu**

- History of Tamil Society, related Archaeological discoveries, Tamil Literature from Sangam age till contemporary times.

**Thirukkural :**

- Significance as a Secular literature
- Relevance to Everyday Life
- Impact of Thirukkural on Humanity
- Thirukkural and Universal Values - Equality, Humanism, etc
- Relevance to Socio - Politico - Economic affairs
- Philosophical content in Thirukkural
- Role of Tamil Nadu in freedom struggle - Early agitations against British Rule - Role of women in freedom struggle.
- Evolution of 19th and 20th Century Socio-Political movements in Tamil Nadu - Justice Party, Growth of Rationalism - Self Respect Movement, Dravidian movement and Principles underlying both these movements, Contributions of Thanthai Periyar and Perarignar Anna.

**அலகு - VIII: தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக - அரசியல் இயக்கங்கள்**

- தமிழ் சமுதாய வரலாறு, அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு.

**திருக்குறள்:**

- மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்
- அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை
- மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்
- திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதநேயம் **முதலானவை**
- **சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின்**

விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு -ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் - விடுதலைப் போராட்டத்தில் **பெண்களின் பங்கு.**

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக - அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி - நீதிக்கட்சி, பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி - சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் மற்றும் இவ்வியக்கங்களுக்கான அடிப்படை கொள்கைகள், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள்.

**UNIT – IX: Development Administration in Tamil Nadu**

- Human Development Indicators in Tamil Nadu and a comparative assessment across the Country – Impact of Social Reform movements in the Socio - Economic Development of Tamil Nadu.
- Political parties and Welfare schemes for various sections of people – Rationale behind Reservation Policy and access to Social Resources - Economic trends in Tamil Nadu – Role and impact of social welfare schemes in the Socio - economic development of Tamil Nadu.
- Social Justice and Social Harmony as the Cornerstones of Socio - Economic development.
- Education and Health systems in Tamil Nadu.
- Geography of Tamil Nadu and its impact on Economic growth
- Achievements of Tamil Nadu in various fields.
- e-governance in Tamil Nadu

**அலகு - IX; தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்**

- தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய **மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் - தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி** இயக்கங்களின் பங்களிப்பு.
- அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் - இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் - தமிழகத்தின் பொருளாதார போக்குகள் - தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்.
- சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்,
- தமிழகத்தின் கல்வி மற்றும் நலவாழ்வு (Health) முறைமைகள்,
- தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்
- பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள்.
- தமிழகத்தில் மின்னாளுகை.

**UNIT-X: APTITUDE AND MENTAL ABILITY**

- Simplification – Percentage - Highest Common Factor (HCF) - Lowest Common Multiple (LCM).
- Ratio and Proportion.
- Simple interest - Compound interest - Area - Volume - Time and Work.
- Logical Reasoning - Puzzles-Dice - Visual Reasoning - Alpha numeric Reasoning – Number Series.

**அலகு - X; திறனறிவும் மனக்கணக்கு நுண்ண றிவும் (APTITUDE AND MENTAL ABILITY)**

- சுருக்குதல் - விழுக்காடு - மீப்பெறு பொதுக் காரணி (HCF) - மீச்சிறு **பொது மடங்கு (LCM).**
- **விகிதம் மற்றும் விகிதாசாரம். தனி வட்டி**
- **கூட்டு வட்டி - பரப்பு - கொள்ளளவு - காலம் மற்றும்** வேலை.
- தருக்கக் காரணவியல் - புதிர்கள் - பகடை - காட்சிக் காரணவியல் - எண் எழுத்துக் காரணவியல் - எண் வரிசை,

## திருக்குறள் தலைப்பு வாரியான அதிகாரப் பகுப்பு

| | |
|---|---|
| மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் | • கடவுள் வாழ்த்து<br>• வான் சிறப்பு<br>• நீத்தார் பெருமை<br>• கூடா ஒழுக்கம்<br>• ஊழ் |

| | |
|---|---|
| அன்றாட வாழ்வில் திருக்குறள் | • அறன் வலியுறுத்தல்<br>• வான் சிறப்பு<br>• அடக்கமுடைமை<br>• கேள்வி<br>• கல்லாமை<br>• இல்வாழ்க்கை<br>• ஒழுக்கமுடைமை<br>• விருந்தோம்பல் மக்கட்பேறு<br>• பயனில சொல்லாமை<br>• இனியவை கூறல்<br>• இன்னா செய்யாமை<br>• ஊக்கமுடைமை<br>• அழுக்காறாமை<br>• புறங்கூறாமை<br>• கல்வி<br>• செய் நன்றியறிதல்<br>• புகழ்<br>• தெரிந்து செயல்வகை<br>• சுற்றந்தாழல்<br>• பெருமை<br>• அவையஞ்சாமை<br>• நடுவுநிலைமை<br>• பொறையுடமை<br>• இடனறிதல்<br>• வெக்காமை<br>• ஆள்வினையுடமை<br>• வெகுளாமை<br>• தீ நட்பு<br>• பொருள் செயல்வகை<br>• வலியறிதல்<br>• அறிவுடமை<br>• பயனில சொல்லாமை<br>• பேதைமை<br>• வினைச் செயல்வகை<br>• நட்பாராய்தல்<br>• ஊக்கமுடைமை<br>• பண்புடைமை<br>• மருந்து<br>• தீவினையெச்சம் |
| மானுடத்தின் மீதான தாக்கம் மற்றும் மாறாத விழுமியங்கள் | • அன்புடைமை<br>• ஒப்புரவறிதல் |

| | |
|---|---|
| | • ஈகை<br>• அருளுடைமை<br>• தவம்<br>• இன்னா செய்யாமை<br>• அவா அறுத்தல்<br>• கண்ணோட்டம்<br>• பெருமை |
| சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு | |
| சமூகம் | • ஒழுக்கமுடைமை<br>• தீவினையெச்சம்<br>• கூடா ஒழுக்கம்<br>• கல்லாமை<br>• கேள்வி<br>• சிற்றினஞ்சேராமை<br>• சூது<br>• கள்ளுண்ணான்மை<br>• பெண் வழிச்சேரல்<br>• வரைவின் மகளிர்<br>• கயமை<br>• புலால் மறுத்தல் |
| அரசியல் | • இறைமாட்சி<br>• படைச்செருக்கு<br>• நடுவுநிலைமை<br>• வான் சிறப்பு<br>• பெரியாரை துனைக்கோடல்<br>• வாய்மை<br>• கொடுங்கொண்மை<br>• இடனறிதல்<br>• ஒற்றாடல்<br>• தெரிந்து வினையாடல்<br>• தெரிந்து செயல்வகை<br>• அமைச்சு<br>• செங்கோண்மை<br>• பகை மாட்சி<br>• தூது<br>• குடிமை<br>• குடிசெயல்வகை<br>• உட்பகை<br>• நட்பாராய்தல்<br>• அறிவுடைமை |

| | |
|---|---|
| | • நாடு<br>• அரண்<br>• பகைத்திறன் தெளிதல்<br>• மன்னரைச் சேர்ந்தொழுகல்<br>• குற்றங்கடிதல் |
| பொருளாதாரம் | • வான் சிறப்பு<br>• பொருள் செயல்வகை<br>• ஈகை<br>• நன்றியில் செல்வம்<br>• உழவு<br>• நல்குரவு<br>• இரவு<br>• இரவச்சம்<br>• நாடு<br>• கல்வி<br>• மக்கட்பேறு |
| தத்துவக் கோட்பாடுகள் | • கடவுள் வாழ்த்து<br>• வான் சிறப்பு<br>• தவம்<br>• நிலையாமை<br>• துறவு<br>• மெய்யுணர்தல்<br>• அவா அறுத்தல்<br>• ஊழ் |

## திருக்குறளில் அரசியல்

திருக்குறள் எக்காலத்திற்கும், எந்நாட்டவருக்கும், எத்தகைய அரசுக்கும் பொருந்தக் கூடியதும், பயன்தரக்கூடியதுமான அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டுள்ள ஓர் அறிவுக் களஞ்சியமாகும். அஃதின்றி, அக்கருத்துகளைச் சங்ககாலத்துக்கு மட்டுமே அல்லது தமிழகத்துக்கு மட்டுமே அல்லது முடியாட்சிக்கு மட்டுமே உரியது எனக் காண்பதும் அதைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதும் நன்றன்று. மேலும் திருவள்ளுவர் கூறும் அரசியல் முடியாட்சியைப் பற்றியதேயென்று சில அறிஞர்களும் வேறு சிலர் அது முடியாட்சிக்கே பொருத்தமான தென்றும் கருது வதையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. மேலும் திருக்குறளை வடமொழி இலக்கியங்களோடும், கிரேக்க இலக்கியங்களோடும் ஒப்பிட்டுப் பார்ப்பது அறிஞர்களிடையே மரபாகிவிட்டதொன்று என்றாலும் பேரறிஞர் பிளேட்டோவின் Philosopher king' ' Communism', ' Ideal State ' போன்ற கருத்துகள் அன்றும், இன்றும், என்றும் வெறும் கனவாகவே (ஏட்டுச் சுரைக்காயாகவே) இருக்கின்றனவே தவிர நடைமுறையில் நமக்குப் பயன் படப்போவதில்லை. அவை சீரிய கருத்துகள் தாமென்றாலும், நடைமுறைக்கு ஒவ்வாதவையுமாகும்.

அது போன்றேதான் வடமொழி நூற்களான மனுஸ்மிருதி , அர்த்த சாஸ்திரம் போன்றவை தற்காலத்துக்குப் பொருந்துவனவும், ஏற்றவையுமன்று. மனுநீதி வருணாசிரமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்திற்கும், அர்த்தசாஸ்திரம் மௌரியர் கால வட இந்தியா போன்ற ஒரு சூழ்நிலைக்குமே பொருத்த மானவை, ஏற்றவையெனக் கூறலாம். திருக்குறள் அவ்வா றின்றிக் காலத்தை வென்று எல்லா அரசியலமைப்புகளுக்கும் தேவையான கருத்துகளைக் கொண்டுள்ளது எனக் கூறினால் மிகையாகாது. ஆகவே திருவள்ளுவரின் அரசியல் கருத்துகளையும், அவை எவ்வாறு பிற அரசியலறிஞர்களின் கருத்துகளுக்கு முன்னோடியாகவும், பிற அறிஞர்களின் கருத்துகளை விடச் சிறப் பானதாகவும்

இருக்கின்றனவென்பதையும் காண்பது நன்று. மேலும் அவரது அரசியற் கருத்துகளில் சில இன்றும் நம் அரசியலுக்கும், அமைதியான வாழ்க்கைக்கும் ஊன்றுகோலாய் இருக்கின்றனவென்பதையும் காண்போம்.

மனிதன் ஆறறிவு பெறத் தோன்றிய நாள் தொட்டே நாடு என்றால் என்ன, ஒரு நாட்டின் இயல்புகள் யாவை, அதன் இலட்சியங்களும் குறிக்கோள்களும் எத்தகையனவாக இருக்கவேண்டும், அதன் கடமைகளும் வரம்புந்தான் யாவை? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்கவும் ஆராய்ச்சி செய்யவும் முற்பட்டான். அரசியலின் முதல் பாடமே நாட்டைப் பற்றியதுதான். காலத்துக்கும் சூழ்நிலைக்கும் தக்கவாறும் தாம் விரும்பி அடைய ஆசைப்பட்ட குறிக்கோள்களுக்கு ஏற்பவும், அவரவர் அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்பவும், அரசியல் வல்லுனர்கள் தங்களது நூற்களில் நாட்டைக் காண முற்பட்டனர். ஒன்றாவது சார்லஸ் மன்னன் கொல்லப்பட்ட பிறகு, பிரான்சு நாட்டுக்குத் தப்பியோடிய தாமஸ்காப்ஸ் என்னும் அறிஞர் தாம் படைத்த லெவியாத்தன் என்னும் நூலில் கண்ட நாடு, அவருக்குப் பின்னால் 1688ல் இங்கிலாந்தில் நடந்த மாண்புறு புரட்சியின் விளைவாய்த் தோன்றிய, லாக் என்பவரின் நூல் காணும் நாட்டைவிட வேறு பட்டது. சுற்றளவிலும் மக்கள் தொகையிலும் கிரேக்கச் சிந்தனையாளர்களின் நாடு தற்கால நாடுகளை விட முற்றிலும் வேறு பட்டது. மாறுபட்ட கருத்துகளும் அறிஞர்களிடையே பரிமாறப்பட்டும் வந்திருக்கின்றன. இன்று வரையும் நாட்டைப் பற்றிய ஆராய்ச்சி முற்றுப் பெறவேயில்லை.

திருவள்ளுவரும், திருக்குறள் 74வது அதிகாரத்தில் நாடு என்றால் என்னவென்பதை நமக்கு எடுத்துக் கூறுகின்றார். உரையாளர்களும், மற்றும் அறிஞர்களும், மொழிபெயர்ப்பாளர்களும் வள்ளுவர் கூறிய நாடு என்னும் கருத்தை ' Territory', ' Country', ' Kingdom', 'Government ' எனப் பொருள் படும்படியும், விளக்கியும், மொழிபெயர்த்து முள்ளனர். அவற்றை முற்றிலும் சரியான விளக்கமென ஏற்றுக் கொள்வதற்கில்லை. நாடு என்ற சொல்லைத் திருக்குறளில் ' State' என்ற பொருளில் திருவள்ளுவர் பயன்படுத்தியிருக்கலாம் என்றே நான் கருதுகின்றேன். இதையே கிரேக்க அறிஞர்கள் 'Polis' எனவும் கூறினர். மேலும் மேனாட்டு அரசியலறிஞர்களிடையே State', Government' ' Sovereign' ஆகிய சொற்களுக்குக் குழப்பம் தீர, ஐயமறப் பொருள் வரையறுத்துக் கூறப்படவில்லை. கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் கூட தாமஸ்காப்ஸ் என்ற பேரறிஞருக்கு ' State ', 'Government' ஆகிய சொற்கள் ஒரே பொருளையே குறிப் பிட்டன. மேலும் முடியாட்சியை விரும்பிய அவர், Sovereign ' என்ற சொல்லால் அரசு என்ற கருத்தை மூடி மறைத்தார். ஆகவே திருக்குறளில் வரும் சில சொற்களுக்குச் சிறுவிளக்கம் தேவைப்படுகிறது என நினைக்கின்றேன். இங்கு, அரசனுக்கு ஆறு அங்கங்கள், அவற்றில் நாடும் ஒன்று என்றும், வடமொழி நூற்களில் அரசனையும் சேர்த்து ஏழு அங்கங்கள் என்றெல்லாம் அறிஞர்களிடையே நடந்து கொண்டிருக்கும் வாதப் பிரதிவாதத் திற்கு நான் போக விரும்பவில்லை. அது இங்குத் தேவையுமில்லை. அப்பிரச்சினையிலிருந்து விடுபட்டுக் கொள்ளவே நான் அதையும் இங்குக் குறிப்பிட நேர்ந்தது. திருக்குறளில் 'நாடு' என்ற சொல்லுக்கு 'State' எனவும், 'அரசு ' என்ற சொல்லுக்கு நாட்டைச் செவ்வனே நடாத்திச் செல்லும் 'Government' என்றும், ' அரசன் ' என்ற சொல்லுக்கு அரசை ஏற்று நடத்தும் நபரையே அரசன் (Sovereign) என்றும் கருதினால் நல்லது. அரசன் முடிமன்னனாகவோ அல்லது முடிவேந்தனாகவோ அல்லது முடியரசனாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. இந்த ஐயப் பாடுகளைச் சற்று மனத்திற் கொண்டால் தான் திருவள்ளுவரின் அரசியற் கலைத் தெளிவு தெரிய வரும். ஆகவே திருக்குறளில் வரும் நாடு வெறும் Territory or Country எனலாம். அஃது அரசனின் ஓர் அங்கம் (உறுப்பு) எனக் கொள்வதெல்லாம் முற்றிலும் தெளிவான கருத்துகள் எனக் கூற இயலாது.

**"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு"**

என இறைமாட்சியில் வரும் முதற்குறள், அரசனின் பிற ஆறு உறுப்புக்களையும் எடுத்துக் கூறிற்றே தவிர், இதைப்போய் வட மொழி நூல்களில் காணப்படும் சப்தாங்கக் கோட்பாட்டுடன் ஒப்பிடுவதும், ' வள்ளுவருக்கு மிக்கவாறும் கௌடில்யரைத் தெரிந்திருக்க வேண்டும்' எனக் கூற முயல்வதும், சரியன்று.

நாட்டின் இயல்பு கூறுமிடத்துத் திருவள்ளுவர், அரசியல் அறிஞர்கள் போற்றிப் புகழும் Plato, Aristotle போன்ற பேரறிஞர்களைப் போன்றே திட்டவட்டமாக ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாகக் கூறுகின்றார். நிறைய மக்களும்

தாராளமான பொருளும் இருந்து விட்டால் அது நாடாகாது. அங்கு, குன்றாத விளையுளைச் செய்வோரையும், சிறந்த கல்வியும் ஞானமுமுடைய சான்றோர்களையும் பிறர்க்குப் பயன்படும் செல்வர் களையும் உடையதே நாடாகக் கருதினார்.

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு"**

மேலும் நாட்டின் இலக்கணம் கூறும் போது பிற நாடுகள் பொறுத்து வந்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி, தன் அரசுக்கு இறைப்பொருள் முழுவதையும் உடன்பட்டுக் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்கின்றார்.

"பொறையொருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு'

தவிர , மிக்க பசியும், நீங்காத நோயும், பிற நாடுகளின் பகையு மின்றி இருக்க வேண்டும்.
**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு "**

நீர்வளமும், மலைவளமும் அழிக்க முடியாத அரணையும் உறுப்பாக உடையதுமாக நாடு இருக்க வேண்டுமென்கிறார். இவை யாவும் இருந்தும் வேந்தமைவு இல்லாத நாடு, பரிமேலழகரின் உரைப்படி குடிகள் அரசன்மீது அன்புடையவராயும், அவன் தனது குடிகளிடம் அருளுடையவனாகவும் இல்லாமல், வேறு எல்லாம் அமைந்திருந்தாலும் அது நாடாகாது எனவும் கூறுகின்றார்.

**"ஆங்கமை வெய்திய கண்ணும் பயமின்றே**
**வேந்தமை வில்லாத நாடு "'**

மேற்கூறியவற்றைச் சுருங்கக் கூறுவோமாயின், நாடு நன் மக்களைக் கொண்டதாயும், தன்னிறைவு பெற்றதாயும் நல்ல பாதுகாப்புடையதாயும், குழப்பமற்ற நல்ல அரசையுடையதாகவும் இருக்க வேண்டுமெனத் திருவள்ளுவர் கூறுகின்றார். சற்றுக் கூர்ந்து நோக்குவோமானால் திருவள்ளுவரின் கருத்து நன்கு புலனாகும். 'விளையுள்' என்றால் உழவர் குலத்தை அதாவது விவசாயத்தையும் விவசாயிகளையுமுடையதே ஒரு நாடு எனக் குறிப்பிட்டார். இதையே தான் ஆங்கில அறிஞர்கள் விவசாயிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பு என்றனர். தன்னிறைவு பெறாத நாடு ஒரு நாடு அல்ல என்ற பொருளில் தான் கூறினார் என்றால் என்னே அக்கருத்தின் செறிவு ! இன்று நாம் பார்க்கின்றோம், தன்னிறைவு அற்று அயல் நாடுகளிடமிருந்து உதவியும் மற்றும் பிச்சையும் பெற்று வாழும் நாட்டை அவர் நாடு எனக் கூற மறுக்கின்றார். நாடுகளுக்கு மட்டும்தான் இந்நியதி எனக்கொள்ள வேண்டாம். மனிதனுக்கும் தான் இது மிகத்தேவை. ஆகவே ஒரு நாட்டிற்கு இயற்கை வளங்களும், அந்நாட்டில் விவசாயமும் விவசாயத்தைப் பெருக்க விவசாயிகளும் வேண்டும் என்கின்றார். ஒரு வகையில் அரிஸ்டாட்டிலின் கோட்பாடாகிய நடுத்தர வகுப்பினர் என்பதை ஈண்டு மனத்தில் கொளல் நன்று. ஒரு நாட்டில் நல்வாழ்வு நடைபெறவும், புரட்சிகளும் பெருங் குற்றங்களும் நடைபெறாமலிருக்கவும், ஏழை பணக்காரர் என்ற வகுப்பினரிடையே கலகம் நிகழாமல் இருக்கவும் நடுத்தர வகுப்பு மக்களையும் தாழ்விலாச் செல்வர்களையும் குறிப்பிட்டார். தாழ்விலாச் செல்வர் என்பதைப் பரிப்பெருமாள் பிறர்க்குப் பயன்படும் செல்வர் எனப் பொருள் கொண்டார். ஒரு நாட்டில் செல்வர்கள் மட்டும் இருந்துவிட்டால் போதாது. அவர்கள் பிறர்க்குப் பயன்தரும் வகையில் அமைய வேண்டும் என்றார். அவ்வாறில்லாக் காரணத்தால் தான் பணக்காரன் ஏழை என்ற இருவகுப்பினரிடையேயும் கலவரமும் புரட்சியும் நிகழ்ந்து, பணக்காரன் அழிவுறுகின்றான். நாடும் தான் அழிவுறப் போகிறது. இன்றைய மிதவாத சோசலிசக் கொள்கைகளின், குறிப்பாக ஜனநாயக அடிப்படைத் தத்துவமே இங்கு தான் புதைந்து கிடக்கின்றது எனக் கூறினால் கூட மிகையாகாது. மேலும் தக்கார் என்றால் சிறந்த கல்வியும் தானமும் உடைய சான்றோர்கள் எனப் பரிப்பெருமாள் பொருள் கொள் கின்றார். மக்கள் மட்டும் இருந்துவிட்டால் அது ஒரு நாடாகாது.

மக்கள் மாக்களாக விருந்தால் அது நாடாகாது. காடாகவே யிருக்கும். மக்கள் கல்வி ஞானம் படைத்தவர்களாகவும், அறிவாளி களாகவும் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இத்தகைய மக்களின் தேவையைத்தான் அறிஞர் பிளேட்டோ அவரது ரிபப்ளிக்' (Republic) என்ற மாபெரும் நூலில் வற்புறுத் தும்போது 'நாடுகள் மலைகளாலும் மரங்களாலும் ஆனவையல்ல "(State are not made of Oaks & Rocks, but out of individuals) என்றார். அறிவிற்சிறந்த தக்காரைக் கொண்ட ஓர் இலட்சிய நாட்டை அமைப்பதில்தான் அவர் மிக்க அக்கறை கொண்டார் என்பது யாவரும் அறிந்ததே.

திருவள்ளுவரின் அரசியற் கலைத்தெளிவுக்கு திருக்குறளின் 64வது அதிகாரமாகிய அமைச்சு ஓர் அருமையான எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இன்று உலக அரசியல் அரங்கில் மிகவும் புகழொடு இயங்குவது மக்களாட்சியேயாகும். சர்வாதிகாரிகள் கூட மக்களாட்சி என்ற முத்திரையின் கீழ்தான் ஆட்சி நடத்துகின்றனர். கம்யூனிசக் கட்சிகள் நடத்தும், கட்சி சர்வாதிகாரம் கூட மக்களாட்சி என்ற பெயரிலேதான் நடை பெறுகின்றது. அதை அவர்கள் 'People's Democracy' அதாவது மக்களின் மக்களாட்சி எனக் கூறுகின்றனர். இத்தகைய மக்களாட்சி முறை வெற்றிகரமாக நடைபெற மக்களின் பிரதிநிதிகள் அல்லது அமைச்சர்களே காரணமாக விருக்கின்றனர். ஜாசோ போன்ற ஒரு சில அறிஞர்களே மக்களாட்சி நேரிடையாக நடைபெற வேண்டும், பிரதிநிதித்துவம் கூடாது என்று கூறினர். பொதுவாக ஜான் லாக்கின் காலத்திலிருந்தே, இம்முறை புழக்கத்திலாகி, ஜான் ஸ்டூவர்ட் மில் போன்ற அறிஞர்களால், தகுந்த இலக்கணங் கூறப்பட்டு, இன்று பெரும் செல்வாக்குடன் உலகெங்கும் நடைபெற்று வரும் மக்களாட்சியின், மையமாக விளங்கும் அமைச்சரவையையும் அமைச்சர்களையும் திருக்குறள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிப் போந்தது. இன்று நமது இந்தியத் துணைக்கண்டத்திலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும், அமைச்சரவைகளே , நாட்டை ஆண்டு வருகின்றன. அமைச்சர்களின் தகைமை, அறிவு, செயல்பாடு ஆகியவற்றுக்குத் திருக்குறளில் கூறியுள்ள இலக்கணங்கள் போல வேறு எந்த நூலிலும் அவ்வளவு சிறப்பாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறப்படவில்லை என்றே கருதலாம். இனி, திருவள்ளுவர் கூறிய இலக்கணங்களையும், அவை தற்காலத்துக்குப் பொருந்துமா என்பதையும் ஆராய்வோம். அமைச்சனாக இருக்கத் தகுதியுள்ளவனுக்கு, ஒரு வினையை மேற்கொள்ள வேண்டிய கருவி, காலம், அதைச் செய்து முடிக்கத் தேவையான பண்பு போன்றவை தேவையென்கிறார்.

**“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்ட தமைச்சு"**

மேலும் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க முற்படும் போது, அமைச்சருக்கு அசைவின்மையும், அதாவது மனக்குழப்பமில்லாமலும், குடிமக்களை நல்ல முறையில் காப்பதும், நல்ல அற நூல்களைக் கற்று ஆற்ற வேண்டியதையும் தவிர்க்க வேண்டி யதையும் நன்கு அறிந்தும், இவை யாவும் ஒருங்கே அமையப் பெற்றவராயும் இருக்க வேண்டுமெனக் கூறுகிறார்.

**"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள் வினையோடு**
**ஐந்துடன் மாண்ட தமைச்சு"**

பகையேற்படும்போது பகைவரின் நண்பர்களை அல்லது துணை அரசுகளைப் பகைவர்களிடமிருந்து பிரிக்க வேண்டிய தேவை யிருந்தால் அவர்களைப் பிரித்துக் கொள்ளுதலும், தம் நண்பர்களைப் பிரிந்து போகாமல் பார்த்துக் கொள்ளுதலும், தம்மிடமிருந்து போனவர்களை தேவைப்பட்டால் மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கு முள்ள ஆற்றலுள்ளவனே அமைச்சராக இருக்க வேண்டு மென்கிறார்.

**“ பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்ல தமைச்சு"**

ஒரு காரியச் செய்கை பலவாற்றால் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்து அறிதலும், அதனைச் செய்ய நினைத்தால், முடியுமாறு எண்ணிச் செய்தலும், ஐயமாகிய வினையைத் துணிந்து சொல்லுதலும், ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான்.

**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்**
**சொல்லலும் வல்ல தமைச்சு"**

எவ்வளவு தான் நீதி நூற்களை நன்கு கற்று அறிந்திருந்தாலும், அமைச்சர்கள் . அவ்வப்போது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தி, இணைந்து செயல்படவும் வேண்டும்.

**"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
**தியற்கை அறிந்து செயல்"**

இவ்வதிகாரத்தை நோக்குமிடத்து அது ஒரு முடிமன்னனின் உறுப்பாகிய அமைச்சர்களுக்குக் கூறிய இலக்கணமாகத் திகழ வில்லை. அவை ஓர் அரசை நடத்தும் அமைச்சருக்குத் தேவை யான இலக்கணங்களாகவே தோன்றுகின்றன. குறள் 633ல் தற்கால அரசுகளில் அமைச்சர்களின் பொறுப்பு எத்தகையது என்பதைக் காண்கின்றோம். பகைவரின் நண்பர்களைப் பிரிப்ப தையும், தம் நண்பர்களைப் பிரியவொண்ணாமல் காத்தலையும், பிரிந்த நண்பர்களைத் தேவைப்படும்போது சேர்த்துக்கொள்ளுதலையும் கொண்ட சமயோசித புத்தி கூர்மையும், அறிவும் அமைச்சருக்குத் தேவையாக இருக்கின்றன. இதையே மாமேதை மாக்கியவெல்லி அவரது 'Prince' என்ற நூலில் வெற்றிகரமாக நாட்டை ஆளுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய குறிக்கோள் எனக் கூறினார். மாக்கியவெல்லிக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் இரண்டே வரிகளில் அழகாகக் கூறியிருக்கிறார் என்றால் அவரது அறிவுக் கூர்மையை நம்மால் போற்றாமல் இருக்க முடியாது. மேலும் ஒரு வினைக்குரிய தகுந்த முடிவைத் தேர்ந்தெடுப்பதில் (அதாவது ஆங்கிலத்தில் "Decision Making" என்று கூறுவார்கள்) அமைச்சர்களின் பொறுப்பு அதிகமாகிறது. பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து சீர்தூக்கி, மிகவும் ஏற்றமான முடிவை எடுப்பதும், எடுத்த முடிவை, திருந்தச் செய்வதும் அமைச்சரின் கடமையாகும். இன்றும் நம் நாட்டில் தக்க முடிவை, அஞ்சாமல் எடுத்து, அயராது உழைத்து வெற்றி பெறும் அமைச்சர்களை நாம் பாராட்டுகின்றோம். இதையே செர்பர்ட் சைமன், ரிச்சார்ட் சின்டர் போன்ற தற்கால ஆட்சியியல் நிபுணர்கள் தங்களது புத்தகங்களில் வற்புறுத்திக் கூறுகின்றனர். இயற்கையிலேயே நுண்ணறிவு படைத்தவர்களாக இருந்து, செயற்கையான நல்ல நூலறிவு பெற்றிருப்பினும், அவ்வப்போது உலக வழக்கும், சூழ்நிலையும் மாறிக்கொண்டேயிருப்பதால், அதற்குத் தகுந்தாற்போல் பொருந்திச் செயல்படவும் வேண்டும் என்ற உண்மையையும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

தற்காலத்தில் உலக அரங்கில் ஒரு நாடு, நாடாகக் கருதப் பட வேண்டுமாயின் அதற்குச் சில இயல்புகள் தேவை. முதன் முதலாக அந்நாட்டிற்கு அதன் மக்கள் மீது அது செலுத்தும் இறைமை என்ற அதிகாரம் மட்டும் இருந்துவிட்டால் போதாது. கூட்டாட்சிகளில் உறுப்பினர்களாக இருக்கும் மாநில அரசுகளுக்கு, அம்மாநில மக்கள் மீது எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. ஆனால் இம்மாநிலங்கள் உலக நாடுகளின் அரங்கில், ஒரு நாடாகக் கருதப்படுவதில்லை. அதுபோலவே, வேறொரு நாட்டின் அதிகாரத்துக்கும் அல்லது பாதுகாப்புக்கும் கீழ் இயங்கும் நாட்டையும், ஒரு நாடாகக் கருதுவதில்லை. ஆகவே ஒரு நாட்டுக்கு உள்நாட்டு இறைமை மட்டுமேயிருந்தால் போதாது, அதற்குப் புறயிறைமையும் வேண்டும். அவ்விறை மையை அதன் எல்லைகளுக்கு வெளியேயும் செலுத்துவதற்குள்ள அதிகாரமும் தகுதியும் ஊக்கமும் தேவையாகின்றன. இவ்விரு வகை இறைமையும் இல்லாத நாடு, ஒரு பரிபூரண, வளர்ச்சி பெற்ற, சுதந்திர நாடாகக் கருதப்பட மாட்டாது. பிற நாடுக ளோடு அதுவும் சமமாக இயங்க வேண்டும், பிறநாடுகள் அதை ஒரு நபராக அங்கீகரிக்க வேண்டும். அத்தகுதி பெற இறைமை யென்னும் அதிகாரம் அந்நாட்டிற்கு இருத்தல் வேண்டும். இத்தகைய இறைமைக் கொள்கை இடைநிலைக் காலத்திற்குப் பிறகே ஐரோப்பிய நாடுகளில் தோன்றி வளரத் தொடங்கியது. மாக்கியவெல்லி, போடான், குரோஷியஸ், காப்ஸ் போன்ற அறிஞர்கள் தான் . இக்கருத்துக்கு இலக்கணங் கூறினர். ஆனால் திருக்குறளும் இக்கருத்துகளையும் அதன் முக்கிய இயல்புகளையும் நன்கு நமக்கு உணர்த்துகிறது. இறைமையைக் காப்பாற்றவும், ஒரு வளர்ச்சியும் வலுவும் பெற்ற நாடாக இயங்கவும் ஒரு நாட்டுக்குத் தகுந்த பாதுகாப்பும், பாதுகாப்புக்குப் போதிய படைபலமும் , படை பலத்துக்குத் தேவையான பிற ஏற்பாடுகளும் தேவைப்படுகின்றன. நாட்டின் செல்வாக்கை அயல் நாடுகளில் செலுத்தவும், வெளிநாட்டின் படைபலத்தை அறியவும், பிறநாடுகளின் நட்பைப் பெறவும், தகுதி வாய்ந்த தூதர்களும், ஒற்றர்களும் தேவையாக இருக்கின்றனர். இதையே திருக்குறளில் படை மாட்சி, அரண், தூது, ஒற்றாடல் ஆகிய கருத்துகளையும் அவற்றின் இயல்பிலக்கணங்களையும் விரிவாகக் கூறியிருக்கிறார்.

திருக்குறளில் 77வது அதிகாரம் படைமாட்சியை அதாவது படையின் தன்மையைப் பத்துக் குறட்பாக்களால் விளக்குகின்றார். அரசன் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையாய முக்கியமான செல்வமானது யானை முதலிய நான்கு உறுப்பாலும் நிறைந்து போரின்கண் ஊறுபடுதற்கு அஞ்சாது நின்று பகைவனை வெல்லக் கூடிய சக்தி வாய்ந்த போர்ப்படையேயாகும்.

**"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாந் தலை"**

படை பலம் இல்லாத நாடுகளின் கதியையும், நல்ல படை பலம் உள்ள நாட்டின் புகழையும் நமது வரலாறே நன்கு உணர்த்தும். படை பலம் மட்டுமிருந்தால் போதாது. நாட்டைப் பிற நாடுகளின் போர் தொடுப்புகளிலிருந்து பாதுகாத்துக் கொளல் வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகளும், படை பலத்தின் ஒரு பகுதியேதான். திருவள்ளுவர் கூறிய அரணும் அத்தகைய பாதுகாப்பு முறைகளில் ஒன்றேயாகும். திருவள்ளுவர் எதிரி மீது போர் தொடுக்க முற்படும் நாட்டிற்கும், - எதிரியைத் தடுத்து நிறுத்தி, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் நல்ல அரண் தேவை யெனக் கூறுகின்றார்.

**" ஆற்று பவர்க்கும் அரண் பொருள் அஞ்சித்தற்**
**போற்று பவர்க்கும் பொருள்'**

மேற்கூறிய இவ்விரண்டோடு இவற்றை நன்முறையில் நடத்தவும் பிறநாடுகளில் செல்வாக்கை உயர்த்தவும், நட்பு நாடுகளைப் பெறவும், ஒரு நாட்டுக்குத் தகுந்த தூதர் குழுவும் அமைப்பும் வேண்டியிருக்கின்றது. திருவள்ளுவர் தானே வகுத்துக் கூறும் இயல்புடைய தூதுவன், கூறியனுப்பியதைச் சென்று கூறும் தூதுவன் என இருவகையாகத் தூதுவர்களைப் பாகுபடுத்திக் கூறியுள்ளார் எனப் பரிமேலழகர் கூறுகிறார். அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் , வேந்து அவாம் பண்புடைமை ; (681) தம் அரசன் மாட்டு அன்புடைமையும், அவனுக்கு ஆவன அறியும் அறிவுடைமையும், அவற்றை வேற்றரசரிடம் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லும் வன்மையும் (682) நூலாருள் நூல் வல்லவனாகவும் (683) இயற்கையாகிய அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், நல்ல கல்வியறிவும் (684) உடை யான் முதல் தரத் தூதுவனாவான். இரண்டாவது வகைத்தூதன், தூய்மை, துணைமை, துணிவுடைமை, வாய்மை ஆகிய குணங்களையுடையவனாவான் (688). இவ்வாறு தூதுவர்க்கு இலக்கணங் கூறிய வள்ளுவர் நாட்டின் நலனையும், பாதுகாப்பையும் எண்ணியே இவ்வாறு கூறியிருக்கின்றார். 1920ம் ஆண்டிற்கு முன்பு வெளி நாட்டு அரசியற் சூழ்ச்சித் திற நயம் (Diplomacy), தோற்றப் பொலிவு, ஆன்ற குடிப்பிறத்தல் முதலிய பண்புகள் தூதுவர் களுக்கு இன்றியமையாததாக இருந்தன. இன்றும் அது ஓரளவுக்குத் தேவையாகவே யிருக்கின்றன.
மேலும் பகை, நொதுமல், நட்பு என்ற மூன்று கட்டங்களிலும் நிகழ்ந்ததை அறிவதற்கு ஒற்றர்கள் தேவையென்றார் வள்ளுவர். ஆகவே தான் திருக்குறள் 581வது குறளில்

**"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண்"**

ஒற்றர்களும் புகழமைந்த நீதி நூலுமாகிய இவையிரண்டும் இரண்டு கண்கள் போன்றவையாகுமென்றார். மேற் கூறிய இந்நான்கும் இறைமையைக் காக்க உதவுகின்றன. இன்னும் ஒரு நாட்டுக்கு இவற்றின் பயனையும் முக்கியத்துவத்தை யும் யாவரும் அறிவர். இவற்றையே மனு , கௌடில்யர், மாக்கிய வெல்லி போன்ற அறிஞர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர். திருவள்ளு வருக்குப் பின் இரண்டாயிரம் ஆண்டுகள் ஓடிப்போய் விட்டன. ஆயினும் அவர் கூறிய இந்நான்கும் இன்றும் அரசியலில் முக்கியப் பங்கேற்று நிற்கின்றன.
திருவள்ளுவரின் அரசியற் கருத்துகளில் சிலவற்றையே இங்கே கண்டோம். இன்னும் பல பக்கங்கள் கூறிக்கொண்டே போகலாம். வள்ளுவரது அரசியற் கருத்துகளான அறம், இறைமை, நாடு, அரசு, அமைச்சு, குடி போன்றவைகளின் அடிப் படைக் கருத்துகளையும், குறிக்கோள்களையும், அவற்றைப் பின்பற்ற வேண்டிய தேவையையும், பின்பற்றினால் வரும் இன்பத்தையும் பயனையும் எல்லா மக்களுக்கும் எடுத்துக்காட்டுகின்றன . திருவள்ளுவரின் அரசியற் கலையை ஓர் ஒழுக்கவியல் நூலாகவோ, அதாவது மனிதப் பண்பாடு நடத்தைகள் பற்றி ஆராயும் ஒரு சிறந்த மெய்விளக்க நூலாகவோ

கருதுவது சாலவும் சிறந்தது. திருக்குறளை வடமொழி நூற்களில் சிறந்ததாகக் கருதப்படும் அர்த்தசாத்திரம், கிரேக்க மொழியிலுள்ள பிளாட்டோவின் 'Republic', அரிஸ்டாடலின் - Politics', மாக்கியவல்லியின் 'Prince', ஹாப்ஸ் லேவியாதனின் Mill on Representative Govt.' போன்ற நூற்களோடு ஒப்பிடுவதும், ஏதாவது ஒருவர் மற்றொருவரின் கருத்துகளைத் தழுவியிருப்பது போலவோ அல்லது ஒருவர் கருத்தோடு மற்றொருவர் கருத்து ஒற்றுமையேற்பட்டாலே அதைக் கொண்டு ஒருவர் மற்றொருவரின் கருத்துக்கு வித்திட் டிருக்கலாம் அல்லது ஆதிக்கம் செலுத்தியிருக்கலாம் என்று ஊகித்து, சில ஆதாரமற்ற கருத்துகளைக் கூறுவதில் ஒரு பயனு மில்லை. இந்நூற்கள் எல்லாம் ஒரு தனிக் கருத்து ஒரு குறிப்பிட்ட குறிக்கோள் அல்லது இலட்சியத்துக்காக எழுதப்பட்டதாகும். உதாரணமாக, அர்த்த சாஸ்திரம் ஒரு நாட்டை யார் ஆள வேண்டும், அது எவ்வாறு ஆளப்பட வேண்டும், பல்வேறு ஆட்சித் துறைகளை எவ்வாறு அமைக்க வேண்டும், இறை வசூலிப்பது எப்படி, குற்றவாளியை எவ்வகைகளில் தண்டிப்பது, அரசு ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு, லஞ்சம் எத்தனை வகைப்படும், இத்தியாதி போன்ற நிருவாக, நிறுவன அமைப் பாண்மையைக் கூறும் ஆட்சியியலாகவும் இயங்குகின்றது. திருக் குறள் அத்தகைய விவகாரங்களில் அதிகமாகத் தலையிடவேயில்லை. திருக்குறளில் ஆட்சிக் கலைக்கு அதிக இடம் இல்லை என்றே கருதலாம். ஒரு வேளை ஆட்சிக் கலையின் அமைப்பையும் நடை முறையையும் விரிவாகக் கூற முற்பட்டால் அரசியலின் அடிப் படைத் தத்துவங்களின் முக்கியத்துவம் குறைந்து விடுமெனக் கருதி, திருவள்ளுவர் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லையோ? அதுபோன்றே தமிழகத்தில் அன்று நடைமுறையில் இருந்த அல்லது வள்ளுவர் கருதும் சட்டம் யாது, சட்டத்தின் அதிகாரம் யாது என்பவை போன்ற கருத்துகளையும் நம்மால் காண முடியவில்லை. இவ்விரு கருத்துகளையும் ஆராய்ச்சி யாளர்கள் கூர்ந்தாராய முற்படல் நன்று.

மேலும் மாக்கியவெல்லியின் 'Prince', கௌடல்யரின் அர்த்த சாஸ்திரம்' ஆகிய நூற்களில், ஒரு நாடு அதன் அயல் நாட்டு விவகாரங்களில் கையாள வேண்டிய அரசியற் சூழ்ச்சித் திறனையும், தந்திரங்களையும், அவர்களது காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, அரசியலில் பயனீட்டு வாதத்தைக் கையாண்டனர். ஆனால் திருக்குறளோ அரசியலையும் பொருளியலையும் ஒன்றோ டொன்றைப் பிணைத்து இவ்விரண்டையும் அறத்துடன் இணைத்துக் கூறிய ஒரு ஒழுக்கவியலாகத் தோன்றுகின்றது. குறள் கூறுவது யாவும் பிண்டமல்லாத பொருள் (abstractions) ஒரு மனக்கண் தோற்றம் என்று கொள்ளலாம். குறள் ஓர் இலட்சிய நூல், மற்றவை செயல்முறைக்குகந்த, நடைமுறையைக் குறிப்பிடும் நூற்களேயாகும்.

இன்னும் கூறப்போனால் திருக்குறள் கூறும் அறம் , அறன் போன்ற கருத்துகளுக்கு வடமொழி இலக்கியத்தில் வரும் (Dharma) தர்மம், பிளேட்டோ கூறும் Justice போன்ற கருத்துகளுக்குச் சமமானதாக ஒப்பிட்டுக் கூறியதில் குறையொன்று மில்லாதிருந்த போதிலும், பிளேட்டோ அழுத்தம் திருத்தமாகக் கூறிய சாக்ரடீஸின் சீரிய தத்துவமான Virtue (ஒழுக்கம், நன்மை , நலம், நேர்மை , தகுதி, நற்குணம் etc.) "Virtue is knowledge" என்பதோடும், அரசியலின் தந்தையாகப் போற்றப் படும் அரிஸ்டாட்டில் கூறிய ' The ideas of the Good ', 'Good life' என்ற கருத்தோடும் ஒப்பிடுவது சாலச் சிறந்த தாகும். Virtue, Good என்ற பொருளில் அறம் என்ற கருத்தைக் கொள்வோமானால், ஒரு நாடு, மக்களின் அறவாழ்க்கைக்கு மிகத் தேவை என்பதை அறியும்போது திருவள்ளுவர் அரசியலின் தந்தையையும் மிஞ்சிவிட்டார் என்பதை நினைக்கும்போது இறும்பூ தெய்துகிறோம். திருவள்ளுவரைப் பிற அறிஞர்களோடு ஒப்பிட முற்படுங்கால், இவ்வடிப்படைக் கருத்துகளையும் மனத்திற் கொளல் வேண்டும்.

| Sl. No. | Title | Number of questions to be asked | Marks | Total Marks | Remarks |
|---|---|---|---|---|---|
| **PAPER - I (S.S.L.C. Standard) (Duration: 1 Hours 30 Minutes)** | | | | | |
| 1. | Tamil to English Translation | 2 | 25 | 50 | Total Marks -100 Minimum Qualifying Marks – 25 |
| 2. | English to Tamil Translation | 2 | 25 | 50 | (Answer sheets of the candidates who do not secure minimum qualifying marks in Paper-I will not be considered for the evaluation of Paper-II) |
| **PAPER - II (Degree Standard) (Duration: 3 Hours)** | | | | | |
| 1. | Precis Writing | 3 | 20 | 60 | Total Marks – 300 |
| 2. | Comprehension | 3 | 20 | 60 | (This part has to be answered fully in Tamil or in English alone) |
| 3. | Hints Development | 3 | 20 | 60 | (Marks secured in Paper-I will not be considered for selection. |
| 4. | Essay Writing on 'Thirukkural' | 3 | 20 | 60 | **Marks secured in Paper-II alone will be considered for selection.**) |
| 5. | Letter writing (Official) | 3 | 20 | 60 | |

**Expected Question Pattern for GROUP II MAINS**

SECTION —A

i. **Each question carries 25 marks.**

ii. ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள்

iii. **Answer all questions**

அனைத்து கேள்விகளுக்கு விடையளி

iv. **Answer not exceeding 200 words each.**

200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்க 2*25=50

**1.** பின் வரும் பகுதியை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிப் பெயர்க்க

The Dravidians were one of the earliest cultural races of India. Commonly the word Dravidian is used as a referential term for South India. Greek geographers knew the area as Damirica. Sanskrit sources refer to them as Dravidi and Damili, and later Dramila and Dravida. Before the advent of the Aryans in India, a great part of India was inhabited by the Dravidians. Several Dravidian dialects, such as Brahui, Villi and Santhel, found stranded in the midst of other tongues in Baluchistan, Rajaputana and Central India testify the wide diffusion of Dravidians in India.

The physical features of the Dravidians are low stature, black skin, long heads, broad noses and long forearms. Their descendant are still found in Tamilnadu. Their origin is still a puzzle. Some scholars strongly affirm that they were the descendants of the primitive inhabitants of India. Others are of the opinion that they were immigrants from West Asia. They passed through Mesopotamia and Baluchistan on their way to India. Their culture spread throughout North India. Later on, with the onslaughts of Aryans in India, they migrated to the South. Some scholars link them with the people of the Indus-valley civilization. According to Fr. Heras, old Tamil is found on the seals of the Indus valley.

Popularly the people in South India are considered as Dravidians. The Dravidians were the most civilized people in India. They were peace-loving. Agriculture was their main profession. They were conversant with the arts of warfare and pottery. Being good traders, they carried a brisk trade with other countries. Their highly developed languages— Tamil, Telugu, Malayalam and Tulu— differed from Sanskrit, the Aryan language. The most civilized of them, Tamil, is rich and copious having a fine literature which is completely independent of Sanskrit. They had a well- defined system of administration. The social system was matriarchal and the society was divided into groups.

**2.** பின்வரும் பகுதியை தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிப்பெயர்க்க

மக்களினம் முதன்முதலில் அங்குதான் தோன்றியது என புவியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனை யூரியா கொள்கை என்ற பெயரால் அவர்கள் அழைப்பர். நிலப்பரப்பிற்கு லெமூரியா கண்டம் அல்லது குமரிக்கண்டம் என பெயர் சூட்டுவர்.

குமரிக்கண்டம் பற்றி ஆய்வு நடத்தியவர்களுள் முதன்மை யானவர்கள் வால்டர் ராலே, ஹெக்கல், சர் ஹோல்டர்ன்ஸ், சர்ஜான் ஈவான்ஸ், ஸ்காட் எலியட் ஆகியோர் ஆவர். குமரி இன மக்கள் இப்போது தென்னிந்தியா, இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து ஆகியவற்றில் வாழ்வதாக இவர்கள் கணிப்பர். தங்கள் கூற்றை அரண்செய்ய இவ்விரு மக்களின் உடல், மொழி அமைப்பில் காணப்படும் ஒற்றுமைகளை இவர்கள் நிரல்படுத்துவர்.

குமரிக்கண்டம் பற்றிய குறிப்புப் புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது பாண்டியனின் தலைநகராய் இருந்த கபாடபுரம் மணி முத்துக்களால் அணிசெய்யப்பெற்றுச் சிறப்புடன் விளங்கியதாக வால்மீகி இராமாயணத்தில் குறிக்கப் பட்டுள்ளது. இலங்கை இந்தியாவிலிருந்து ஒரு ஆற்றினால் பிரிக்கப்பட்டிருந்ததாக மெகஸ்தனிசு சுட்டிச் செல்வர். மக்கள் இனம் தோன்றிய இடம் இன்று இந்துமாக் கடலுக்குள் அமிழ்ந்து கிடக்கிறது என 1900 இல் வெளியான மனித அறிவியல் என்ற திங்களேடு சுட்டுகிறது. தலைச்சங்கம் நடைபெற்ற தென்மதுரையும், இடைச்சங்கம் நடைபெற்ற கபாடபுரமும் குமரிக் கண்டத்திலேயே இருந்தன என்பர் புலவர் கோவிந்தன். குமரிக் கண்டம் இருந்தமை பற்றி இச்சான்றுகள் சுட்டிச் செல்லினும் அதன் எல்லைப் பரப்புப் பற்றியோ, மறைந்த காலம் பற்றியோ அவற்றில் குறிப்புக்கள் இல்லை.

குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட செய்தி
“பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள "

(சிலம்பு :11:19-20)

எனச் சிலப்பதிகாரத்தில் கட்டப்பட்டுள்ளது. மாடலன் குமரியாற்றில் நீராடியது பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆனால் நூலின் இறுதியில் வைத்து எழுதப்படும் பாயிரத்தில் குமரி என்பது கடலாகக் குறிக்கப்படுகிறது. இவ்விடைப்பட்ட காலப்பகுதியில் குமரியாறு கடல்கொள்ளப்பட்டிக்கலாம் என்பர் உரையாசிரியராகியப் பேராசிரியர்.

SECTION —B

i. **Each question carries 25 marks.**

ii. ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள்

iii. **Answer all questions**

அனைத்து கேள்விகளுக்கு விடையளி

iv. **Answer not exceeding 200 words each.**

200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்க **5*20=100**

1. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக - சரியான தலைப்பும் தருக

**Summarize the following section by one-third of its size and write in your own style - give the correct title**

முத்தும் முத்தமிழும் மிளகும் சந்தனம் அகில் முதலிய மணப் பொருள்களும் குரங்கு, மயில் முதலிய விலங்கினங்களும் தமிழர் உலகிற்களித்த உயர் கொடை ஆகும். தமிழர் மேற்கு நாடுகளோடு முற்காலத்தும், கிழக்கு நாடுகளோடு பிற்காலத்தும் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழர் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பிற்காலத்தில் அரசியல் தொடர்பு ஆகியது. இவ்விரண்டும் கொடுத்த பெருந்தொடர்பு தொடர்பாகும் சமய அடிப்படையிலான பண்பாட்டுத் தொடர்பாகும்.

இந்திய மொழிகளின் திரிபு நிலையையும், வட சொற்களையும் நீக்கிப்பார்த்தால் பெரும்பான்மையானவை தமிழ்ச் சார்பினவே. உலக மொழிகளோடு தமிழின் தொடர்பு இப்போது பெரிதும் நிலைநாட்டப்பெற்று வருகிறது. "உலகப் பண்பாட்டுக்குத் திராவிடம் வழங்கிய தனிச் சிறப்பு வாய்ந்த நன்கொடை திராவிட மொழியேயாகும். ஒருசில நீங்கலாக உலகின் பெரும்பாலான ஒட்டுநிலை மொழிகள் பழைய தமிழ் மொழியையே தம் தலைமை மொழியாய் ஏற்றுள்ளன" என்பர் இராமச்சந்திர தீட்சிதர்.

கி.மு.1,000 அளவில் எபிரேய மொழியில் கலந்த துகி (தோகை : மயில்) என்ற சொல் தமிழின் தொன்மைக்குச் சான்றாகும் என்பர் கால்டுவெல் திராவிட - மொழிகள் சித்திய மொழியினத்தோடு தொடர்பு உடையன என்றும் கால்டுவெல் கூறுவர். பின்னிஷ் மொழி தமிழுடன் தொடர்பு உடையது என்று கால்டுவெல் கூறியதை பர்ரோ நிறுவியுள்ளார்.

தமிழ் மேலை ஐரோப்பிய கெல்திய தெயுத்தானிய மொழிகளை ஒத்திருக்கிறது" என்பர் போப், "சுமேரிய மொழியும் இந்தோ ஐரோப்பிய மொழிகளும் தமிழின் கூறுகளை உடையன" என்பர் ஞானப் பிரகாசம். கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு, எபிரேயம், பிரெஞ்சு மொழிகளில் வழங்கும் தமிழ்ச் சொற்களைக் கால்டுவெல், மாகறல் கார்த்திகேய முதலியார், தேவநேயப் முதலியோர் காட்டியுள்ளனர் பாவாணர்.

தென்னாட்டு திராவிட மொழியிலிருந்து ஜப்பான் மொழி தோன்றியது என்பார் புங்கி உத்தமர். தமிழுக்கும் ஜப்பான் மொழிக்கும் உள்ள தொடர்பைத் தமிழகம் வந்த சுசுமு ஓனோ கூறினார். தென்னாப்பிரிக்காவில் தமிழ்ச் சொற்கள் பழங்குடி மக்களிடையே வழங்குவதைக் கண்டு நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் வியந்துள்ளார். கொரியா, இந்தோனேசியா மொழிகளில் தாய் தந்தையை அம்மா அப்பா என்றே வழங்குகின்றனர். பிரஞ்சு, இந்தோனேசிய மொழிகள்

**தமிழுடன் கொண்டுள்ள தொடர்பைத் தனிநாயக அடிகள் காட்டுவர். மலாய் மொழியில் வழங்கும் தமிழ்ச் சொற்களையும், தமிழர்வழி சென்ற சொற்களையும் இராமச்சந்திர தீட்சிதர், ந. சஞ்சீவி ஆகியோர் காட்டுவர். பலுச்சித்தான் பகுதியில் வழங்கும் பிராகுவி மொழி தமிழின் கிளைமொழி ஆகும்.**

**கீழை நாடுகளான சீனம், மலேசியா, ஜாவா, இந்தோனேசியா தாய்லாந்து, கொரியா முதலிய நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். சீன நாட்டுக்கு போகர் என்னும் சித்தர் சென்ற தாகக் கூறுவர். சித்தமருத்துவம், சண்டை முறைகள் முதலியன சீன வழி ஜப்பானுக்குப் பரவியதாகக் கூறுவர். கி.மு. 7 நூ. அளவில் தமிழகப் பொருள்கள் சீனநாடு வந்ததைச் சீன வரலாறுகள் கூறும். தமிழகம் மேலை நாடுகளுக்குப் பொருளோடு தமிழ்ப் பெயர் கொடுத்தது. ஆயின் சீன நாட்டுப் பொருள்களைப் பெற்றுச் சீனம் என இணைத்து வழங்குகிறது. சீனக் கண்ணாடி, சீனத்துப்பட்டு, சீனி வெடி, சீனாக் கற்கண்டு, சீனாச் சர்க்கரை ஆகியன குறிக்கத்தக்கன ஒடிசா மாநிலத்தில் அஸ்கா என்னும் ஊர்ச்சர்க்கரை என்பதால் அஸ்கா என்பதுபோல், சீனச் சர்க்கரை என்பதை சீனி' என்றே வழங்குகிறோம். கி பி. ஆறாம் நூற்றாண்டில் பல்லவ இளவரசர் போதி தருமர் என்ற திருப்பெயர் பூண்டு சீனத்தில் 'ஜென் (Zen) (தென்) என வழங்கும் சமய நெறியைப் பரப்பினார் என்று இராமச்சந்திர தீட்சிதர் குறிப்பிடுவார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் யுவான்சுவாங் என்னும் சீனப் பயணி தமிழகம் வந்துள்ளார்.**

Pearls and Muthamizh pepper sandalwood Akhil etc. bridal items and monkeys, peacocks etc. are the highest gift of Tamils to the world. Tamils were associated with the West in the early days and with the East later. The business connection that the Tamils had later became political contact. The relationship between the two is religious and cultural in nature.

Excluding the distortion of Indian languages and Northern words, the majority are pro-Tamil. Tamil's connection with world languages is now greatly established. Ramachandra Dixit said, "Dravidian language is a unique contribution of Dravidian to world culture. With a few exceptions, most of the world's lingua franca languages have adopted old Tamil as their chief language."

Caldwell says that the word tuki (tokai: peacock), which was mixed with the Hebrew language around 1000 BC, is a testament to the antiquity of Tamil. Burrow has established Caldwell's claim that the Finnish language is related to Tamil.

Tamil is similar to Western European Celtic and Deutan languages. "The Pope said," Sumerian and Indo-European languages have elements of Tamil. Gnana Prakasam " The Tamil words given in Greek, Latin, Hebrew, Hebrew and French are shown by Caldwell, Magaral Karthikeya muthaliyar and Devanayapaavanar.

According to Pungi Uttam, the Japanese language originated from the southern Dravidian language. Susumu Ono, who came to Tamil Nadu, said the connection between Tamil and Japanese. Dancer Padma Subramaniam is amazed to see Tamil words being delivered among the tribal people in South Africa. In Korean and Indonesian languages, mother and father are referred to as Appa and amma. The French and Indonesian languages show their connection with Tamil. Ramachandra Dixit, Na. Sanjeevi explained. The Brahuvi language offered in the Baluch region is a branch language of Tamil.

They also had trade relations with the eastern countries such as China, Malaysia, Java, Indonesia, Thailand and Korea. It is said that bogur Siddhar went to China. Psychiatry, martial arts, etc. are said to have spread to Japan by the Chinese way. BC 7th Chinese histories say that Tamil Nadu goods came

to China in large quantities. Tamil Nadu gave the Tamil name with meaning to the western countries. And receives Chinese goods and supplies them as Chinese. Chinese glass, Chinese sugar, sugar cane, Chinese sugar, Chinese sugar are the most important sugar in the state of Odisha, so we give Chinese sugar as 'Aska'Ramachandra Dixit mentions that in the 6th century AD, the Pallava prince who nicknamed as Bodhi Darma, spread the religious practice of offering 'Zen' (South) in China. Yuanzhuang, a Chinese traveler came to Tamil Nadu in the 7th century.

2. **பின்வரும் பகுதியை கவனமாகப் படித்து அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு தெளிவாகவும், சுருக்கமாகவும் பதில் எழுதுக**

   **Read the following passage carefully and write clear and concise answers to the questions given at the end of it**

**சங்கம் என்ற சொல் கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் இருந்த தமிழ், இலக்கிய கழகத்தைக் குறிக்கிறது. சங்கம் என்ற சொல் அந்த காலகட்டத்தின் எந்த இலக்கிய படைப்புகளிலும் குறிப்பிடப்படவில்லை. இதை முதலில் அப்பர் பயன்படுத்தினார், இறையனார் அகப்பொருள் உரை சங்கம் என்ற வார்த்தையை மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். தற்போது, சங்க காலம் பொதுவாக மூன்றாவது தமிழ் சங்கத்தை குறிக்கிறது. சங்கம். மூன்று சங்கங்களின் இருந்த்து பாரம்பரியமாக தெரிய வருகிறது**

**இறையனார் அகப்பொருளுக்கு உரை எழுதியவர் மூன்று சங்க்கங்கள் இருந்த்தை குறிப்பிடுகிறார். இதன் படி பாண்டிய ஆட்சியாளர்கள் மூன்று சங்கங்களை நிறுவினார்கள், முதல் சங்கம்,இடைச் சங்கம், கடைச் சங்கம். கடல் கொள்ளப்பட்ட தென்மதுரையில் முதற் சங்கமாகிய தலைச்சங்கம் இருந்தது என்பர். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றம் எறிந்த குமரவேள், அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர், நீதியின் கிழவன் முதலான 549 புலவர்கள் அச்சங்கத்தில் இருந்தனர் 4449 புலவர்கள் பாடினர். அவர்கள் பாடிய முதுநாரை, முதுகுருகு, பெரும் பரிபாடல், களரியாவிரை முதலான நூல்கள் மறைந்து போயின. காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக 89 மன்னர்கள் தலைச் சங்கத்தைப் புரந்தனர். இச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலவியது.**

**இடைச்சங்கம் கடல் கொண்டகபாடபுரத்தில் 3700 ஆண்டுகள் நிலவியது. இருந்தையூர்க் கருங்கோழி சிறு பாண்டரங்கன், துவரைக் கோமான், கீரந்தை, வெள்ளர்க் காப்பியன், திரையன் மாறன் உள்ளிட்ட 59 புலவர்கள் வீற்றிருந்தனர்; 3700 புலவர்கள் பாடினர். கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல், மாபுராணம், பூதபுராணம், தொல்காப்பியம் முதலான பல நூல்கள் இயற்றப்பட்டன. இவற்றுள் தொல்காப்பியம் ஒன்றே இன்று கிடைத்துள்ளது. வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக 59 மன்னர்கள் இச்சங்கத்தைப் புரந்தனர்.**

**பாண்டியர் தலைநகரமாயிருந்த மதுரை மாநகரில் கடைச் சங்கம் நிறுவப்பட்டது. கபிலர், பரணர், நக்கீரனார், சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர்க் கிழார் உட்பட 49 புலவர்கள் வீற்றிருந்தனர். 449 புலவர்கள் பாடினர். எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் வேறு பிற நூல்களும் இப்புலவர்களால் இயற்றப்பட்டன. 1850 ஆண்டுகள் நிலவிய இச்சங்கத்தை முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 பாண்டிய மன்னர்கள் போற்றிப் புரந்தனர்.**

**கலித்தொகை மற்றும் சிலப்பாதிகாரத்தில், பாண்டிய பிரதேசம் நீரில் மூழ்கியது பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கை நூலான மகாவம்சம், தட்சிணா மதுராவின் (தெற்கு மதுரை) மணமகனுடன் விஜயாவின் திருமணத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. இது பற்றிய விவரங்கள் இறையனார் அகப்பொருள் உரையில் உடன்படுகின்றன. முந்தைய படைப்புகளைப் பற்றிய தொல்காப்பியரின் குறிப்புகள் பாரம்பரிய பார்வையை பலப்படுத்துகின்றன. எனவே மூன்றாம் சங்கத்திற்கு முன்னர் பல சங்கங்கள் இருந்திருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**ரோமானிய வரலாற்றாசிரியரான ஸ்ட்ராபோ, பாண்டிய ஆட்சியாளர் ரோமானிய பேரரசருக்கு அனுப்பிய தூதரகங்களைப் பற்றி பேசுகிறார். அரிக்கமேடு, பொள்ளாட்சி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் காணப்படும் ரோமானிய நாணயங்கள், தமிழ், நாட்டோடு ரோம் வர்த்தக தொடர்புகளை உறுதிப்படுத்துகின்றன. பிளினி தி எல்டர், அலெக்ஸாண்டிரிய**

புவியியலாளர் தாலமி மற்றும் பெரிப்ளஸ் ஆஃப் எரித்ரேயன் கடலின் ஆசிரியர் தெரியாத படைப்பு பல தமிழ், துறைமுகங்கள் மற்றும் நகரங்களைக் குறிப்பிடுகின்றன. தமிழர்களுக்கும் யவனர்களுக்கும் (ரோமானியர்கள்) இடையிலான வர்த்தகத்தின் தமிழ் இலக்கியத்தில் உள்ள சான்றுகள் கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளின் இந்த எழுத்தாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் அல்லாத இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்களோடு சங்க இலக்கியமும் சங்க காலத்தின் தேதியை நிர்ணயிக்க உதவி புரிகிறது. என் சுப்ரமணியன் கூற்றுப்படி இலங்கை அரசன் கஜபாகு செங்குட்டுவன் உறவு சங்க காலத்தோடு ஒத்துப்போகிறது. சிலப்பதிகாரம் கயவாகு ( கஜபாகு ) என்ற இலங்கை அரசன் செங்குட்டுவனால் கண்ணகிக்கு கோயில் எடுத்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டான் என பதிவு செய்கிறது. முதலாம் கஜபாகு இலங்கைகை கி.பி 173ல் இருந்து 191 வரை ஆட்சி செய்தான் எனவே செங்குட்டுவனின் காலாம் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருக்க வேண்டும், இதற்கு போதிய ஆதாரங்களை சங்க இலக்கியம் வழங்குவதால் சங்க காலத்தினை உறுதிப் படுத்தலாம்

The word Sangam refers to the Tamil, literary academy that existed in the early centuries of the Christian era. The word Sangam is not mentioned in any of the literary works of that age. It was first used by Appar, and the Iraiyanar Agapporul Urai repeatedly uses the word Sangam. At present, the Sangam age commonly denotes the epoch of the third Tamil. Sangam. Traditional accounts mention the existence of three Sangams.

The commentary of the Iraiyanar Agapporul Urai mentions the existence of three Sangams. According to it, the Papdya rulers established three Sangams the First Sangam, Middle Sangam and Last Sangam.The First Sahgam was held in South Madurai which, it is believed, was located south of Kanyakumari. It consisted of 549 members including Siva, Subramanya, Agastya and Munanchiyur Mudinakarayar. It had 4449 scholars. The important literary works of the First Sahgam were the Perumparipadal, Mudukuruku, Mudundrai and Kalariyavirai. Agastya wrote his grammar work the Agatiyam. This Sangam was patronized by eighty-nine Pandya kings beginning from Kaysina Valudi to Kadungon. Of them, seven were poets as well. The Sangam lasted for 4400 years.

When South Madurai was engulfed by the sea, the Pandya capital which was the abode of Sangam shifted to Kapadapuram. It had fifty-nine members. Some of the important personalities were Agastiyar, Tolkappiyar, Vellur Kappiyanar and Tavaraikoman. 3700 authors came to the notice of this academy. Some of the works of the period were the Mdpuranam, Isainana Isainunukkam, Perum- kalittogai, Kuruhu Vendali and Viyalamalai Akaval. The Agatiyam and Tolkappiyam were important grammar works. Fifty-nine Pandya rulers patronized this Sangam that lasted for 3700 years.

When Kapadapuram was also washed away by the sea, the Pandya capital was shifted to North Madurai. The Third Sangam had forty-nine members including Sirumedaviyar, Sendambudan, Arivudaiyanar, Perum Kunrurkilar, ilam Tirumaran, Nallanduvanar, Marudan llanaganar and Nakkirar. 449 poets submitted their poems. Forty-nine Pandya rulers from Mudattirumaram to Ukkiraperuvludi patronised it. It existed for 1850 years.

In the Kalithogai and Silappadikaram, there are references to the submergence of the Pandya territory. The Ceylonese chronicle, the Mahavamsa mentions the marriage of Vijaya with a bride from Dakshina Madura (South Madurai). The details agree with those in Iraiyanar's the Agapporul Urai. Tolkapiyar's references to earlier works strengthen the traditional view. So it is concluded that there might have existed academies prior to the Third Sangam.

Strabo, the Roman historian, speaks of the embassies sent by the Pandya ruler to the Roman Emperor. Roman coins found at Arikkamedu, Pollachi and Karur confirm Rome's trade contacts with the Tamil, country. Pliny the Elder, the Alexandrian geographer Ptolemy, and the anonymous work the Periplus of Erythraean Sea mention many Tamil, ports and cities. The evidence in Tamil literature of trade between the Tamils and the Yavanas (Romans) is confirmed by these writers of the first three centuries of the Christian era.

Along with non-Tamil. Literature and inscriptions, the Sangam literature also gives information that helps to fix the date of the Sangam age. N.Subrahmanian terms the Gajabahu - Senguttuvan synchronism as the sheet-anchor of Sangam chronology. The Silappadikaram refers to Kayavahu (Gajabahu), the Ceylonese ruler who attended the consecration of the idol of Kannagi in a temple built by Senguttuvan. As Gajabahu I ruled Ceylon between 173 and 191 A.D., Sengutuvan's reign must have been in the latter half of the second century A.D. Sangam literature provides ample evidence to determine the age of the Sangam.

1. What is the evidence confirming the Sangam period?
சங்க காலத்தை உறுதிப்படுத்தும் சான்றுகள் யாவை
2. What Dipavamsam text recorded
தீபவம்சம் எதனைப் பதிவு செய்தது
3. Give an account of First sangam text and writers
முதல் சங்கத்தில் இருந்த நூல்கள் மற்றும் ஆசிரியர்களைப் பற்றி குறிப்பு தருக
4. Explain about three sangams
மூன்று சங்கங்களை பற்றி விளக்குக
5. What confirms the relationship between the Greeks and the Tamils
யவணர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயான உறவை உறுதிப்படுத்துவன யாவை

**3.** கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு சொந்த நடையில் விரிவாக எழுதி சரியான தலைப்பு கொடுக்கவும்
Write in your own style in detail with the following Hints and give the suitable title

சங்ககாலம் - தெய்வ வணக்கம் - ஆதிக்கம் செலுத்தாத சமயம் - வெவ்வேறு கடவுள்கள் - சமணம் - பௌத்தம்- முன்னோர் வழிபாடு - சமய விழாக்கள்
Sangam period - god worship - no domination of religion - various gods - janinism-budhism- Ancestor worship - religious festival

**4.** திருவள்ளுவர் சமூக நெறிமுறைகள் குறித்து ஒரு உரை புத்தகம் எழுதவில்லை, ஆனால் அவர் சாதாரண மனிதர்களின் தேவைகள் மற்றும் வாழ்க்கை குறித்தும், மக்கள் நல அரசு குறித்தும் அக்கறை கொண்டிருந்தார் - விளக்குக
Thiruvalluvar did not set out to write a text book on social ethics but he was concerned with the needs and life of common man and with the welfare of the state - explain

**5.** மாநில அரசின் சுகாதாரத்துறை செயலாளராக இருக்கும் நீங்கள் இந்திய தலைமை தேர்தல் ஆணையருக்கு பெருந்தொற்று ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் கூட்டம் கூடுவதை ஒழுங்குபடுத்த வழிமுறைகளை உருவாக்க வேண்டி கடிதம் வரைக

As a health secretary of state government, write a Letter to Chief Election commissioner of India to make the guidelines to regulate the crowd in election campaign with the outbreak of the pandemic.